1979 ஏப்ரல் 27]

சென்னையிலுள்ள திரையரங்குகள்

*வினா எண் 848—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள சில திரையரங்குகளில் வெளியாட்களை வைத்து தியேட்டர் உரிமையாளர்களே டிக்கெட்டுகளை அதிக விலைக்கு விற்பதை அரசு அறியுமா ?

(ஆ) இதனால், படம் பார்க்கச் செல்லும் ரசிகர்கள் நஷ்டமும் கஷ்டமும் அடைவதால் அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது ?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவை செயலர்):

(அ) இதுவரை இதுபற்றிய தகவல் ஏதும் இல்லை.

(ஆ) சமூக விரோதிகளும், இதன்மூலம் இலாபம் பெற விரும்பும் சிலரும், சில திரையரங்குகளில் டிக்கெட்டுகளை வாங்கி கள்ளமார்க்கெட்டுகளில் விற்பதைத் தடுக்க, போலீசார் சென்னை நகரப் போலீஸ் விதி 34ஏ-படி நடவடிக்கை எடுத்து அவர்களைக் கைது செய்கின்றனர். புதுப்படங்கள் திரையிடும் சமயத்தில் அத்தகைய சமூக விரோதிகளிடமிருந்து ரசிகர்களுக்குத் தொல்லை ஏற்படாமல் இருக்க அத் தியேட்டர்களில் கண்காணிப்புடன், காவல் பாதுகாப்பு அளிக்கப்படுகின்றது.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவரவர்களே, இன்றைய தினம் சென்னை நகரத்தில் சினிமா பார்ப்பதற்கென்று யார் சென்றாலும் அங்கே இருக்கக்கூடிய கட்டணத்திற்குச் சினிமா டிக்கட் கிடைப்பதில்லை. குறிப்பாக, ரூ. 1.80 டிக்கட்டை ரூ. 4-க்கு விற்பனை செய்கிறார்கள். அதைக் கண்காணிக்க அதிகாரிகள் இருப்பதாக அமைச்சரின் செயலர் சொன்னார்கள். அந்த அதிகாரிகளே அதற்கு உடந்தையாக இருந்து அங்கே விற்பதாகப் பேசப்படுகிறது. ஆகவே, இதுவரை எந்த எந்த தியேட்டர்களில், எத்தனை எத்தனை கேஸ்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவை செயலர்): பேரவைத் தலைவரவர்களே, திரை அரங்குகளிலே இருக்கிற அதிகாரிகளே இப்படி கள்ள மார்க்கெட்டிலே டிக்கட்டுகளை வாங்கி விற்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், அது பற்றிய தகவல் ஏதும் அரசுக்கு வர

வில்லை. அப்படி ஏதேனும் ஆதாரபூர்வமான தகவல்கள் மாண்புமிகு உறுப்பினரிடம் இருக்குமாயின் அதை அரசுக்குத் தெரியப்படுத்தினால் அதைப் பற்றி தீவிரமாகக் கண்காணித்து சட்டப்படி அவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்கு இந்த அரசு ஆவன செய்யும்.

1–1–1978 முதல் 31–12–1978 முடிய ஓர் ஆண்டுக் காலத்தில் கள்ளச் சந்தையில் திரைப்பட அனுமதிச் சீட்டுகளை விற்க முற்பட்ட குற்றத்திற்காக 1,455 பேர்கள் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு 16–3–1979 முடிய 216 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று காவல் துறை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

திரு. வி. கே. கோதண்டராமன் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர். அதிகாரிகள் வாங்கி விற்கிறார்கள் என்று உறுப்பினர் சொல்ல வில்லை.............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்வி கேட்ட உறுப்பினரே அதுபற்றி கேட்கப் போகிறார் ; நீங்கள் உட்காருங்கள்.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களைக் கைது செய்ததாக அமைச்சரின் பேரவை செயலர் சொன்னார்கள். அவர்கள் சாதாரணமானவர்கள். ஏதோ ரூ. 2, ரூ. 3 கிடைக்கும் என்று விற்றிருக்கலாம். ஆனால், அந்த டிக்கட்டை கொடுத்தவர் யார்? அவர் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவை செயலர்) : தலைவரவர்களே, டிக்கட்டுகளை வாங்கியதற்குப் பின்னால்தான் விற்கிறார்கள். சாதாரணமாக, யார் போய் க்யூவிலே நின்றாலும் முதன்மையாக நிற்பவருக்கு டிக்கட்டுகள் கொடுக்கப்படுகிறது. பின்னர் இறுதியாக, டிக்கட் கவுண்டர் க்ளோஸ் செய்து விட்ட பிறகு வருகிற ரசிகர்களுக்கு, முன்னால் க்யூவிலே நின்று டிக்கட்டு களை வாங்கியவர்கள் அதிக லாபம் வைத்து விற்கிறார்கள். அதிலே, அதிகாரிகளே தவறு செய்கிறார்கள் என்று நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதாரபூர்வமாகத் தெரிவித் தால், மீண்டும் சொல்கிறோம், அதற்குத் தக்க நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும்.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, கள்ள மார்க்கெட்டில் வெளியிலே டிக்கட்டுகள் விற்கப்படுவதாக சொல்கிற பொழுது, ரிசர்வ் செய்யப்படுகிற டிக்கட்டுகள் தான் முன்னால் கொடுக்கப்படுகிறது. ஆகவே, அதை விற்க முடியும்.

1979 ஏப்ரல் 27]

ஆனால், ரிசர்வ் செய்யப்படாத டிக்கட்டுகள், ரூ. 1.80, 1.40 என்று இருக்கிறது. அந்த டிக்கட்டுகள் எப்படி வெளியே விற்கப் படுகிறது? அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா?

[முற்பகல் 9—10]

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவை செயலர்) : தலைவர் அவர்களே, நிச்சயமாக அதுபற்றி நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, சென்னை நகரில் இருக்கக்கூடிய பல சினிமா தியேட்டர்களில் ஒவ்வொரு நபருக்கும் டிக்கட் கொடுத்து, அவர்கள் உள்ளே போனால் வெளியே வரமுடியாது என்ற அமைப்பை வைத்திருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது உள்ளே போய் உட்கார்ந்த நபர்கள் எப்படி வெளியே வந்து விற்க முடியும் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே, தியேட்டரைச் சேர்ந்தவர்கள் தான் இவ்வாறு டிக்கட்டுகளை முன்கூட்டியே விற்பனை செய்து, அதிக விலைக்கு கொடுக்க ஏற்பாடு செய்கிறார்கள் என்று அறிய முடிகிறது. ஆகவே, அரசு இந்தத் துறையில் அதிகக் கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவை செயலர்) : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோ சனையை இந்த அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

மேல் நிலைப் பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்கள்

* வினா எண். 849— திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

தமிழ் எம். ஏ. பட்டம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களை மேனிலைப் பள்ளிகளில் நியமிப்பதில் 4-வது இடம் என்பதி லிருந்து தமிழ் ஆசிரியர்: பட்டதாரி ஆசிரியர்: என்று 1 : 1 என்ற விகிதத்தில் நியமிக்கும் எண்ணம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை.

திரு. வெ. கருணாமூர்த்தி ; தலைவரவர்களே, இதில் தமிழ் புலவருக்கு படித்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா? உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் ஒருவர் பி.ஏ.